

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (11.06.2016) பாசனத்திற்காக பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்து, மலர்களை தூவினார்.

செ.வெ.எண்: 350/2016 நாள்: 11.06.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,**

**பேச்சிப்பாறை அணையிலிருந்து விவசாய மக்கள் பயன்பெறும்வகையில் இன்று (11.06.2016) தண்ணீரை திறந்து விடப்பட்டது.**

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குமரி மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, அரசாணை எண் 271 பொதுப்பணித்துறை, நாள் 10.06.2016 மூலம் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு 1 மற்றும் சிற்றாறு 2 ஆகிய அணைகளிலிருந்து கோதையாறு மற்றும் பட்டணங்கால் பாசனத்திற்கு 11.06.2016 முதல் தண்ணீர் திறக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையினை நிறைவேற்றும்விதமாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (11.06.2016) மாலை 4.00 மணியளவில் பாசனத்திற்காக பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்து, தெரிவித்ததாவது:-

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 48 அடி கொள்ளளவு கொண்டது. தற்போது 37 அடி தண்ணீர் இருப்பில் உள்ளது. மேலும் 1353 கனஅடி தண்ணீர் பேச்சிப்பாறை அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பேச்சிப்பாறை அணையிலிருந்து வினாடிக்கு 200 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.இதனால் கோதையாறு மற்றும் பட்டணங்கால் அமைப்பில் உள்ள தோவாளை கால்வாய், நாஞ்சில் நாடு புத்தனார் கால்வாய், பத்மநாபபுரம் கால்வாய் மற்றும் பட்டணங்கால் கால்வாய் பாசன பரப்பில் உள்ள 79,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் வசதி பெறும். எனவே விவசாய பெருங்குடிமக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, அதிக மகசூல் பெற்று, பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் அப்துல்ஹமீத், தமிழ்நாடு மாநில மீன்வளக் கூட்டுறவு இணையத்தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி, செயற்பொறியாளர் சுப்பிரமணியன், மாவட்ட பால்வளத்தலைவர் திரு.எஸ்.எ. அசோகன், மாவட்ட கூட்டுறவு அச்சகத்தலைவர் திரு. ஆர்.ஜெயசுதர்சன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் திரு.கே.பகவதிபெருமாள், பத்மநாபபுரம் நகராட்சி தலைவர் திருமதி. சத்தியாதேவி, இணை இயக்குநர் (பொறுப்பு) வேளாண்மைத்துறை திரு. சந்திரசானன் நாயர், உதவி செயற்பொறியாளர்கள் மோகனதாஸ், ஹெரால்டு இனாக், உதவி பொறியாளர்கள் லூயிஸ் அருள்செல்லின், வல்சன் போஸ், சுபாஷ், துணை இயக்குநர் (வேளாண் விற்பனை) திரு. சுரேஷ் ஜோஸ், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) திரு. ஆனந்தராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன் உள்ளிட்ட அரசு அலுவலர்களும், விவசாய சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.